வரும் யானைகளை வனப் பகுதிக்கு விரட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முதுமலை புலிகள் காப்பக கள இயக்குநர் மற்றும் துணை இயக்குநர்களுக்கும், தலைமை வன உயிரினக் காப்பாளரால் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. யானைகளைக் கண்காணிக்க ட்ரோன்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின்மூலம் யானைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மிளகுப் பொடி, தேனீக்கள் மற்றும் மிளகாய்த் தூள் போன்றவற்றைக் கொண்டு இரவு நேரங்களில் வரும் யானைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த களப் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலைமை முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் வரும்வரை, வேட்டைத் தடுப்புக் குழுக்களை அப்பகுதியில் முகாமிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10–05

2. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம் தொடர்பான சட்டமுன்வடிவினை நான் இந்த அவையிலே அறிமுகப்படுத்த விழைகிறேன்.

தொழிற்கல்விப் படிப்புகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில், நகர்ப்புறங்களிலுள்ள தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்களைவிட, கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் சேர்க்கை

பெறுவதைக் கருத்திலே கொண்டு, 1997 ஆம் ஆண்டு, கிராமப்புறப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்குத் தொழிற்கல்விப் படிப்புகளில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குக் கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டது.

கிராமப்புற மாணவர்கள் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் சிரமங்களைக் கருத்திலேகொண்டு, 2006 ஆம் ஆண்டு, தொழிற்கல்விப் படிப்புக்கான நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டு, 2007–2008 ஆம் ஆண்டு முதல் +2 தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இருப்பினும், கடந்த பல ஆண்டுகளாக நமது மாநிலத்தில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுடன் போட்டியிட்டு, அவர்கள் விரும்பக்கூடிய உயர் கல்வியினைப் பெறுவதும், தொழிற்கல்விப் படிப்புகளில் சேருவதும் மிகவும் கடினமாக இருக்கிறது. பல்வேறு சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் அனைத்து மாணவர்களுக்கும் உயர் கல்வி பெறுவதில் சமவாய்ப்பு கிடைக்கப்பெறவில்லை. ஏற்கெனவே, அரசுப் பள்ளியில் படித்த மாணவர்களுக்கு மருத்துவ மாணவர் சேர்க்கையில் தேசிய தகுதி நுழைவுத் தேர்வில் (NEET) பெற்ற மதிப்பெண் அடிப்படையில், 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. மருத்துவப் படிப்பைப் போன்றே, கால்நடை மருத்துவம், வேளாண் கல்வி, பொறியியல், சட்டம் போன்ற இதர தொழிற்கல்விகளிலும், அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவில் இருக்கிற காரணத்தால், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் சமூகப் பொருளாதார நிலைகள், அத்தகைய மாணவர்கள் அனுபவித்த குறைபாடுகள் ஏதேனும் இருப்பின் மற்றும் பல்வேறு வகைகளிலான தொழிற்கல்விப் படிப்புகள், கல்வி நிறுவனங்களில் அவர்களின் முந்தைய சேர்க்கை தொடர்பான சிக்கல்களை ஆய்வு செய்து, அவர்களது குறைந்த பிரதிநிதித்துவத்திற்கு மேற்கூறப்பட்ட காரணங்கள் வழிவகுத்திருந்தால், அவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான தீர்வு நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க டெல்லி உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி, மாண்புமிகு நீதியரசர் திரு. த. முருகேசன் அவர்களின் தலைமையில், மூத்த அலுவலர்களைக் கொண்ட ஓர் ஆணையமானது அரசால் அமைக்கப்பட்டது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2021 ஆகஸ்ட் 26

தமிழ்நாட்டில் பலவகையான பள்ளிகளில் ஏறக்குறைய 1.3 கோடி மாணவர்கள் பயின்று வருகின்றனர். 2019–2020 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைக் கல்வி இரண்டாம் ஆண்டு பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை 8.5 இலட்சம் ஆகும். அவர்களுள் 3.45 இலட்சம் மாணவர்கள் அரசுப் பள்ளி மாணவர்கள் ஆவார்கள்.

பொறியியல் கல்வியில், 2020–2021 ஆம் கல்வியாண்டில் அண்ணா பல்கலைக்கழகத்தில் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை விகிதம் 0.83 விழுக்காடு ஆகும். இதேபோன்று, அரசுப் பொறியியல் கல்லூரிகளில் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் முறையே, 6.31 விழுக்காடு மற்றும் 0.44 விழுக்காடு மட்டுமே சேர்க்கை பெற்றுள்ளனர். மற்ற தொழிற்கல்விப் படிப்புகளான, கால்நடை மருத்துவப் படிப்பிலும் 2020–2021 ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை விகிதம் 3 விழுக்காடு மட்டுமே உள்ளது. இது கடந்த ஆண்டுகளைக்காட்டிலும் குறைவு. இதே நிலையே மீன்வளம் தொழிற்கல்விப் படிப்பிலும் நிலவுகிறது. கடந்த ஆண்டில், 3.7 விழுக்காடு அரசுப் பள்ளி மாணவர்களே இப்படிப்பில் சேர்ந்துள்ளனர். வேளாண்மை தொழிற்கல்விப் படிப்பில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை 4.89 விழுக்காடாக உள்ளது. திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்திற்கான மாணவர் சேர்க்கையானது, பொது நுழைவுத் தேர்வின் அடிப்படையில் நடைபெறுகிறது. அதில், அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாகவே உள்ளது. இவ்வாறு தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்களோடு போட்டியிட்டு சேர்க்கை பெறுவதில் அரசுப் பள்ளி மாணவர்கள் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். ஏழ்மை நிலை, அறியாமை, போதிய வழிகாட்டுதல் இன்மை காரணமாக, அரசுப் பள்ளிகளில் பயிலக்கூடிய மாணவர்களின் பெற்றோர்கள் தொழிற்கல்விப் படிப்புகள் குறித்த விழிப்புணர்வினைக் குறைவாகப் பெற்றுள்ளனர். எனவே, இதனை நன்கு ஆய்வு செய்து, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்த பல தீர்வுகளைப் பரிந்துரைத்ததோடு மட்டுமல்லாமல், தொழிற்கல்விப் படிப்புகளுக்கு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 10 விழுக்காட்டிற்குக் குறையாமல் முன்னுரிமை வழங்கலாம் என ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

முற்பகல் 10–10

ஏற்கெனவே, மருத்துவப் படிப்பில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு முன்னுரிமை வழங்கியுள்ளதுபோல,

பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு அனைத்து இட ஒதுக்கீட்டுப் பிரிவுகளிலும், 7.5 விழுக்காடு இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என முடிவு எடுக்கப்பட்டு, அதற்கான சட்டமுன்வடிவு இந்த அவையிலே கொண்டுவரப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம் தொடர்பான சட்டமுன்வடிவினை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த தொழிற் கல்விகளில் அரசுப் பள்ளிகளிலே படித்த மாணவர்களுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொடுத்திருக்கிற சமூக நீதி காவலர், எங்களுடைய முதலமைச்சர் தலைவர் அவர்களுக்கு உயர் கல்வித் துறையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுடைய நலன் என்று வருகிறபோது ஏதோ இன்று, நேற்று சிந்திக்கின்ற தலைவர் நம்முடைய தலைவரல்ல. 1989 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்திலே இலவச bus pass–க்காக முதல் குரல் கொடுத்தவர் எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு அந்த இலவச bus pass–ல் நானும் ஒரு பயனாளியாக அரசுப் பள்ளியில் படித்த மாணவன் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீதியரசர் ஐயா முருகேசன் அவர்களுடைய பரிந்துரையின்படி, தொழிற் கல்விகளில் அரசுப் பள்ளிகளிலே படித்த மாணவர்களுக்கு 7.5 சதவிகித ஒதுக்கீடு இன்றைக்கு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருப்பதற்குப் பெருமையடைகின்றோம். சமூக நலத் துறையின் மூலமாக கொரோனாவினால் பாதிக்கப்பட்டு, பெற்றோரில் ஒருவரை இழந்த மாணவர்களுக்கு 3 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியென்றும், இருவரையும் இழந்துவிட்டவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியென்றும் அறிவித்து, அந்த மாணவர்களுக்கு உரிய நன்மையைச் செய்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசுப் பள்ளிகளிலே படித்த மாணவர்களுக்கு அரசுத் துறை வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அறிவித்து, மாணவர்களுடைய நலனைக் காத்துக் கொண்டிருக்கின்ற, 'Master of all students' என்று அழைக்கப்படக்கூடிய எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்கள் தமிழகத்திலே சுமார் 40 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். மருத்துவக்

2021 ஆகஸ்ட் 26] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

கல்வி பயிலும் மாணவர்களில் கிட்டத்தட்ட 3.5 சதவிகிதம் மாணவர்கள் அரசுப் பள்ளியில் படித்தவர்கள். இவர்களெல்லாம் பெரும்பாலும் ஏழையெளிய, நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள். அப்படிப்பட்ட மாணவர்களெல்லாம் தனியார் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு இணையாகக் கல்வி கற்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. கடந்த காலத்தில் மருத்துவக் கல்லூரி மற்றும் பல் மருத்துவக் கல்லூரி போன்ற தொழிற் கல்வி படிப்புகளிலே இவர்கள் எல்லாம் சேரமுடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. இதற்குக் காரணம், NEET *தேர்வில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அறிமுகம் செய்யப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் ஏகமனதாக ஏற்பதாகச் சொன்னீர்கள். எனவே, அதை மட்டும் பதிவு செய்துவிடுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு முன்னர் நிலைமை எப்படி இருந்தது என்று சொல்ல வேண்டும்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைப்பற்றி இந்தச் சட்டமுன்வடிவினை ஆய்வு செய்யும்போது பேசலாம். (குறுக்கீடு) நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவுக்கு ஆதரவு தெரிவிக்கிறீர்கள். 'இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறேன்' என்று சொல்லிவிட்டு அமர்ந்தால் நன்றாக இருக்கும். பிறகு, இந்தச் சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது மற்ற எல்லாவற்றையும் பேசலாம்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இந்தச் சட்டமுன்வடிவை ஒருமனதாக நாங்களும் ஆதரிக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தச் சட்டமுன்வடிவு குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்தத் தீர்மானம் இப்பேரவையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*